**நவம்பர் – 28**

# TNPSC துளிகள்

- அரியானாவின் சோனிபட் நகரில் உள்ள OP ஜிண்டால் உலகப் பல்கலைக்கழகத்தில் இந்தியாவின் முதல் அரசியலமைப்பு அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது.
- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, தண்ணீரில் காணப்படும் பீனால் அல்லது பென்சீன் போன்ற தீங்கு விளைவிக்கும் மாசுக்களைத் துல்லியமாக கண்டறிவதற்காக ஒரு மலிவு விலையிலான மற்றும் கையடக்கமான (எளிதில் எடுத்து செல்லக் கூடிய) AroTrack எனப்படும் சாதனத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அரசியல் சாராத பின்னணியில் உள்ள இளையோர்களை அரசியலுடன் இணைக்கச் செய்வதற்காக என்று 2025 ஆம் ஆண்டு விக்சித் பாரத் இளம் தலைவர்கள் பேச்சு வார்த்தையானது புது டெல்லியில் ஏற்பாடு செய்யப்பட உள்ளது.
- உத்தரப் பிரதேச மாநில அரசு ஆனது, லக்னோவில் உள்ள குக்ரைல் வனப்பகுதியில் இந்தியாவின் முதல் இரவு நேர சுற்றுப் பயண பூங்கா என்ற வசதியினை உருவாக்கி வருகிறது.
- 11வது ASEAN பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம் பிளஸ் (ADMM-Plus) ஆனது லாவோ மக்கள் குடியரசின் வியான்டியானே நகரில் கூட்டப்பட்டது.
- இந்தியச் சூரியசக்திக் கூட்டணிக் கழகம் (SECI) ஆனது, சந்தை வழிமுறைகள் குறித்த தகவல் பரிமாற்றத்தினை மேம்படுத்துவதற்கும் பசுமை ஹைட்ரஜனில் சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் வேண்டி H2Global நிறுவனத்துடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் குவாலியர் நகரானது, அதிநவீன அழுத்தப்பட்ட உயிரி-எரிவாயு ஆலையுடன் கூடிய, இந்தியாவின் முதல் தன்னிறைவான கோசாலையினை தொடங்கி உள்ளது.
- இந்திய நிலக்கரி லிமிடெட் நிறுவனமானது, மதிப்புமிக்கப் பசுமை உலக சுற்றுச்சூழல் விருது மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்புப் பிரிவில் பசுமை உலகத் தூதர் என்ற மதிப்பு மிக்கப் பட்டத்துடன் கௌரவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியா மற்றும் கரீபியன் சமூக அமைப்பு (CARICOM) இடையேயான உச்சி மாநாடு ஆனது கயானாவின் ஜார்ஜ்டவுன் நகரில் நடைபெற்றது.
- இந்தியாவின் அனைத்து கடலோர மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் Sea Vigil 24 எனப்படும் நான்காவது நாடு தழுவியக் கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியானது நடத்தப்பட்டது.
- ஆப்பிரிக்காவின் மேம்பாட்டில் தொழில்மயமாக்கலின் மாபெரும் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காக என்று ஆண்டுதோறும் நவம்பர் 20 ஆம் தேதியன்று ஆப்பிரிக்கா தொழில்மயமாக்கல் தினம் கொண்டாடப் படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## ஒரு சுகாதாரம் மற்றும் ஒரு பருவநிலை மையம் – தமிழ்நாடு

- சுகாதாரத் துறையின் கீழ் 'ஒரு சுகாதாரம் மற்றும் ஒரு பருவநிலை மையத்தினை' அமைப்பதற்கு மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- இது பருவநிலை மாற்றத்தின் பின்னணியில் அதிகரித்து வரும் வெப்பநிலை, காரணி மூலம் நோய் பரவல் அதிகரித்தல், பல்லுயிர்ப் பெருக்க இழப்பு, நுண்ணுயிர் எதிர்ப்பு

திறன் மற்றும் கடலோரப் பாதிப்பு போன்றப் பிராந்தியம் சார்ந்த சவால்களை எதிர் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த மையம் ஆனது, பருவநிலை சூழ்நிலைகளின் அடிப்படையில் நோய்ப் பாதிப்பு போக்குகளைக் கணிப்பதற்காக வேண்டி செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மாதிரிகளை உருவாக்கும்.
- இது பாதிக்கப்படக்கூடியச் சமூகங்களை மையமாகக் கொண்டு, பருவநிலையினால் ஏற்படக்கூடிய நோய்களை கண்காணிக்க மாநில அளவிலான ஒரு தரவுத் தளத்தினை உருவாக்கி புதுப்பிக்கும்.
- இது சுகாதார அபாயங்கள் மற்றும் நோய்களை ஆய்வு செய்வதற்காக என்று விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளும்.




## அதிக எண்ணிக்கையிலான தடையற்ற அணுகல் கொண்ட நுகர்வோர்



- மின்சார ஆற்றல் பரிமாற்றச் சந்தையில் இருந்து மின்சாரம் வாங்கும் தடையற்ற நுகர்வோர் எண்ணிக்கையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- தடையற்ற அணுகல் என்ற ஒரு கருத்தாக்கமானது, மிக அதிக அளவில் மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்கள், மாநில உற்பத்தி அமைப்புகளைச் சார்ந்து இல்லாமல் தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து நேரடியாக மின்சாரத்தை வாங்க நன்கு வழி வகுக்கிறது.
- இந்திய ஆற்றல் பரிமாற்றச் சந்தை லிமிடெட் (IEX) நிறுவனத்தில் 5,244 தடையற்ற அணுகல் கொண்ட நுகர்வோர் உள்ளனர், மேலும் இந்த நுகர்வோர் பெரும்பாலும் தமிழ்நாடு, குஜராத், ஆந்திரப் பிரதேசம், ஹரியானா மற்றும் பஞ்சாப் ஆகிய சில

மாநிலங்களில் உள்ளனர்.

- தமிழ்நாடு மாநிலமானது, மின்சார ஆற்றல் பரிமாற்றச் சந்தையில் (IEX) மொத்தம் 1,247 தடையற்ற அணுகல் பெற்ற நுகர்வோர்களைக் கொண்டிருந்தது.


# தேசியச் செய்திகள்

## VISION இணைய தளம்

- மாணவர்களின் புத்தாக்கம் மற்றும் ஒரு விழிப்புணர்வு வலையமைப்பிற்கான விக்சித் பாரத் முன்னெடுப்பினை (VISION) மத்திய அரசு தொடங்கியுள்ளது.
- இந்த பெரும் முன்னெடுப்பானது, பிற்படுத்தப்பட்ட குழந்தைகளிடையே கல்வி, திறன் மேம்பாடு மற்றும் புதுமைகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் சுமார் 350 ஆக புத்தொழில் நிறுவனங்கள் 2024 ஆம் ஆண்டில் 1.67 லட்சமாக வளர்ச்சியடைந்ததையடுத்து, மூன்றாவது பெரியப் புத்தொழில் நிறுவனச் சூழலை இந்தியா கொண்டுள்ளது.




## முக்கியமான கனிமங்கள் பட்டியலில் கற்கரியாக்க நிலக்கரி




- நிதி ஆயோக் அமைப்பின் அறிக்கையானது, கற்கரியாக்க நிலக்கரியை முக்கியமான கனிமங்களின் பட்டியலில் சேர்க்குமாறு அரசிடம் கோரியுள்ளது.
- கற்கரியாக்க நிலக்கரியின் விலையானது, எஃகின் விலையில் தோராயமாக சுமார் 42

சதவிகிதம் ஆகும்.

- ஐரோப்பிய ஒன்றியமானது இந்தக் கற்கரியாக்க நிலக்கரியை இதர மற்ற 29 மூலப் பொருட்களுடன் ஒரு முக்கியமான மூலப்பொருளாக அறிவித்துள்ளது.
- கற்கரியாக்க நிலக்கரிக்காக இந்தியா சுமார் 85 சதவீதம் வரை இறக்குமதியைச் சார்ந்து உள்ள நிலையில் இது ஐரோப்பிய ஒன்றியத்தை விட மிக (தோராயமாக 62 சதவீதம்) அதிகமாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## அணுசக்தி கோட்பாடு திருத்தம் - ரஷ்யா




- ரஷ்யாவின் அணு ஆயுதக் கொள்கையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு அதிபர் விளாடிமிர் புடின் ஒப்புதல் அளித்துள்ளார்.
- மாஸ்கோ அணு ஆயுதங்களை, தனது எதிரி நாடுகளைத் தடுக்கும் ஒரு வழிமுறையாக கருதுகிறது மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதைக் கருத்தில் கொள்ள வேண்டிய சூழ்நிலைகளை நிர்ணயித்து வருகிறது.
- அதன் அணுசக்தி எதிர்ப்பு ஆனது மற்ற அணுசக்தி நாடுகளை மட்டும் அல்லாமல், ரஷ்யாவிற்கு எதிரானத் தாக்குதலை உருவாக்குவதற்கு அல்லது நடத்துவதற்கு தனது நிலம், நீர் அல்லது வான்வெளியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கும் இதர பிற நாடுகளையும் இலக்காகக் கொண்டுள்ளது.
- ரஷ்யா தனது நெருங்கிய நட்பு நாடான பெலாரஸையும் அதிகாரப்பூர்வமாக தனது அணுசக்தி பாதுகாப்பின் கீழ் கொண்டு வந்துள்ளது.
- தற்போது அது தனக்கு எதிராகவோ அல்லது பெலாரஸுக்கு எதிராகவோ "அதன் இறையாண்மை அல்லது பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு முக்கியமான அச்சுறுத்தலை உருவாக்கும்" வழக்கமான தாக்குதல் ஏற்பட்டால் கூட தனது அணு ஆயுதங்களைப் பயன்படுத்தலாம்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## காந்த வட துருவம்

- பூமியின் காந்த வட துருவம் ஆனது அதிவேகத்தில் ரஷ்யாவை நோக்கி நகர்கிறது.

- கடந்த சில தசாப்தங்களாக அதன் வேகத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவாகி உள்ளது.
- இது முன்பு மணிக்கு 15 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்த நிலையில் தற்போது அதன் வேகம் ஆனது 1990 மற்றும் 2005 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 50-60 கிலோ மீட்டர்/ மணி ஆக உயர்ந்துள்ளது.
- இந்தத் துருவமானது கனடாவில் இருந்து சைபீரியாவை நோக்கி தோராயமாக 2,250 கிலோமீட்டர்கள் நகர்ந்துள்ளது.
- அனைத்து தீர்க்க ரேகைகளும் ஒன்றிணைகின்ற மிகவும் நிலையான புவியியல் வட துருவத்தைப் போலல்லாமல், காந்த வட துருவம் தொடர்ந்து மாறுகிறது.
- தற்போதையப் போக்கு தொடர்ந்தால் அடுத்த பத்தாண்டுகளில் காந்த வட துருவம் 660 கிலோமீட்டர் நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 2040 ஆம் ஆண்டில், இது திசைகாட்டிகள் உண்மையான வடக்கிற்குப் பதிலாக சற்று கிழக்குப் புறமாக நோக்கி காட்டி உலகளாவிய வழி செலுத்துதலைப் பாதிக்கும்.
- இந்த இயக்கங்கள் ஆனது, ஒவ்வொரு 3,00,000 ஆண்டுகளுக்கும் ஒருமுறை நிகழும் ஓர் இயற்கை சுழற்சியின் ஒரு பகுதியாகும் என்பதோடு கடைசி முழு துருவ மாற்றமானது 780,000 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றது.





## இந்தியாவின் நாஃபித்ரோமைசின்

- நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்புத் திறன் கொண்ட பல்வேறு தோற்றுருக்களை எதிர் கொள்வதற்காக வேண்டி, இந்தியா "நாஃபித்ரோமைசின்" எனப்படும் உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட தனது முதல் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்தினை அறிமுகப்படுத்தி உள்ளது.
- இது "உயிரித் தொழில்நுட்பத் துறை ஆராய்ச்சி உதவி சபையின்" (BIRAC) ஆதரவுடன் உருவாக்கப் பட்டது.

- இது "வோல்கார்ட்" எனப்படும் மருந்து நிறுவனம் மூலம் "மிக்னாஃப்" என்ற வர்த்தகப் பெயரில் சந்தைக்குக் கொண்டு வரப் பட்டுள்ளது.
- நஃபித்ரோமைசின் அதன் வகுப்பில், கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலான காலங்களில் உலகளவில் உருவாக்கப்பட்ட முதல் புதிய இவ்வகை நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து என்ற வரலாற்றுச் சிறப்பைக் குறிக்கிறது.




## MECHS – உயிரி நெகிழி



- பாஸ்டனில் உள்ள நார்த் ஈஸ்டர்ன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், தண்ணீரில் கரையும் புதிய உயிரி நெகிழியினை- MECHS உருவாக்கியுள்ளனர்.
- MECHS ஆனது ஒரு காகிதம் அல்லது படலம் போன்ற பொருளை உருவாக்குவதற்காக இழை வார்ப்புக் கொண்டு வடிவமைக்கப்பட்ட E. கோலை பாக்டீரியாவைக் கொண்டு உள்ளது.
- MECHS ஆனது நெகிழிப் படலம் போல நீட்டிக்க இயலும் என்ற நிலையில் இதனைப் புரதங்கள் அல்லது பெப்டைட்களைச் சேர்ப்பதன் மூலம் மிகவும் அதிகமான அல்லது குறைவான உறுதித் திறனுடன் கூடிய ஒன்றாக மரபணு ரீதியாக வடிவமைக்கலாம்.

## MeerKAT ரேடியோ தொலைநோக்கி


- சர்வதேச வானியலாளர்கள் குழுவானது, அண்டவியல் பரிணாம ஆய்வுத் துறையில் மாபெரும் வானொலி அண்டங்களை ஆய்வு செய்வதற்காக வேண்டி MeerKAT ரேடியோ தொலைநோக்கியைப் பயன்படுத்தியுள்ளது.
- இது வரை பதிவு செய்யப்படாத புதிய இராட்சத அளவிலான ரேடியோ அண்டங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

- MeerKAT ஆனது தென்னாப்பிரிக்காவின் வடக்கு கேப் மாகாணத்தில் அமைக்கப் பட்டு உள்ளது மற்றும் 64 ஏற்பிகளைக் கொண்டுள்ளது.
- இது சதுர கிலோமீட்டர் தொகுப்பு ஆய்வகத் திட்டத்தில் (SKA) தென்னாப்பிரிக்காவின் பங்களிப்பின் ஒரு பகுதியாகும்.



## STRONG – புதிய மொழி அமைப்பு

- இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், நுண் துளைகளின் வடிவம் மற்றும் கட்டமைப்பை ஒரு எழுத்துரு வரிசையின் வடிவத்தில் குறியாக்கம் செய்யும் புதிய மொழியை உருவாக்கியுள்ளனர்.
- இந்த மொழி STRONG எனப் படுகிறது (நுண் துளை வடிவவியலின் எழுத்துத் தொடர் வடிவம்).
- இந்த மொழியானது இயந்திர கற்றல் மாதிரிகளைப் பயிற்றுவிப்பதற்கு உதவுகிறது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## கரிமக் கழிவுகளிலிருந்து வெளியாகும் மீத்தேன் உமிழ்வினை குறைத்தலுக்கான பிரகடனம்

- COP29 மாநாட்டிற்கு தலைமை தாங்கும் அஜர்பைஜான் கரிமக் கழிவுகளிலிருந்து வெளி வரும் மீத்தேன் உமிழ்வினைக் குறைக்கும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- முதலாவதாக 30க்கும் மேற்பட்ட நாடுகள் இதில் கையொப்பமிட்டுள்ளன.
- இந்த சில நாடுகள் கரிமக் கழிவுகளிலிருந்து வெளி வருகின்ற உலகளாவிய மீத்தேன் உமிழ்வுகளில் 47 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளன.
- மேலும், அஜர்பைஜான் நாடானது உணவு மற்றும் வேளாண் அமைப்புடன் இணைந்து,

விவசாயிகளுக்கான பாகு ஹர்மோனியா பருவநிலை முன்னெடுப்பினை அதிகாரப் பூர்வமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

- ஒரு பருவநிலை நடவடிக்கையின் முகவர்களாக விவசாயிகளின் அடிப்படைப் பங்கை அங்கீகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பெய்ஜிங்+30 மதிப்பாய்வு குறித்த ஆசிய-பசிபிக் பிராந்திய அறிக்கை




- 'பாலினச் சமத்துவம் மற்றும் அதிகாரமளித்தலுக்கான புதிய பாதைகளை வகுத்தல்: பெய்ஜிங்+30 மதிப்பாய்வு குறித்த ஆசிய-பசிபிக் பிராந்திய அறிக்கை' என்ற ஒரு தலைப்பிலான அறிக்கை சமீபத்தில் வெளியிடப் பட்டுள்ளது.
- பெய்ஜிங் பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கானத் தளம் ஆனது 1995 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து பல பரிணாமங்களைக் கண்டுள்ளது.
- வடக்கு மற்றும் மத்திய ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளில் சமூகப் பாதுகாப்புப் பலன்களில் (முறையே 57.4 சதவீதம் மற்றும் 47.0 சதவீதம்) குழந்தைகளுக்குப் (0 முதல் 18 வயது வரை) பயன் மிகு உயர் மட்டப் பலன்களை ஒப்பீட்டளவில் வழங்கியுள்ளன.
- இது பிராந்தியச் சராசரியான 18.3 சதவீதத்தை விட அதிகமாகும்.
- இந்தியாவில் பாலினம் சார்ந்த வரவு செலவு ஒதுக்கீட்டில் 218% தசாப்த கால அதிகரிப்பு பதிவாகியுள்ளது.
- இந்தியாவைத் தவிர, பாலினம் சார்ந்த நடவடிக்கைக்கான நிதி ஒதுக்கீட்டினை மிக வெற்றிகரமாக ஏற்றுக் கொண்ட நாடுகளில் ஒன்றாக பிலிப்பைன்ஸ் இருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது.

- பெண்களுக்குப் பயனளிக்கும் முக்கியத் திட்டங்கள் விலக்கப்பட்டதாலும், பாலினம் சார்ந்தப் பகுத்தறியப்பட்டத் தரவு இல்லாததாலும், இந்தியா தனது பாலினம் சார்ந்த நடவடிக்கைக்கான நிதி ஒதுக்கீட்டின் வரையறுக்கப்பட்ட செயல்திறனுடன் போராடி வருகிறது.

# முக்கிய தினங்கள்

## பெண்கள் தொழில்முனைவோர் தினம் - நவம்பர் 19

- இது பெண் தொழில்முனைவோரின் சாதனைகளை அங்கீகரிப்பது மற்றும் தங்களின் தொழில் துறை தொடக்கங்களை உருவாக்குவதற்காக வேண்டி மேற்கொள்ளப்படும் பெண்களின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த உலகளாவிய முன்னெடுப்பானது, மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைப்பினால் (WEDO) நிறுவப்பட்டது.
- இந்த நாள் முதன்முதலில் 2014 ஆம் ஆண்டில் நியூயார்க் நகரில் அனுசரிக்கப் பட்டது.




## பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - நவம்பர் 19




- இது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு உலகளாவிய முயற்சியாகும்.
- 1979 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது பெண்களுக்கு எதிரான

அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்றுவதற்கான உடன்படிக்கையினை (CEDAW) ஏற்றுக் கொண்டது.

- 2008 ஆம் ஆண்டில், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக UNiTE என்றப் பிரச்சாரத்தைத் தொடங்கியதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபை மற்றொரு குறிப்பிடத் தக்க நடவடிக்கையை மேற்கொண்டது.
- உலகளவில், 736 மில்லியன் பெண்கள் உடல் ரீதியிலான மற்றும்/அல்லது பாலியல் ரீதியான வன்முறையை எதிர் கொண்டுள்ளனர்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Every 10 Minutes, a woman is killed. #NoExcuse. UNiTE to End Violence against Women" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## உலகின் மிக விலையுயர்ந்த கடவுச் சீட்டு 2024

- உலகிலேயே மிக விலையுயர்ந்த கடவுச் சீட்டுகளை மெக்சிகோ கொண்டுள்ளது.
- மெக்சிகோவில் 10 ஆண்டு கால கடவுச் சீட்டினைப் பெறுவதற்கான கட்டணம் 19,464 ரூபாய் ஆகும்.
- இரண்டாவது மிக விலையுயர்ந்த கடவுச் சீட்டுக் கட்டணமானது ஆஸ்திரேலிய நாட்டில் வசூலிக்கப் படுகிறது என்ற நிலையில் இதற்கான கட்டணம் சுமார் 19,023 ரூபாய் மற்றும் இது 10 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்.
- அதைத் தொடர்ந்து அமெரிக்கா உள்ள நிலையில் அந்நாட்டின் கடவுச் சீட்டிற்கான கட்டணம் 13,899 ரூபாய் ஆகும்.
- வெறும் 1,492 ரூபாய் கட்டணத்துடன் ஐக்கிய அரபு அமீரகம் ஆனது, உலகிலேயே மிக மலிவானதொரு கட்டணத்தில் கடவுச்சீட்டினை வழங்குகிறது.
- 10 ஆண்டுகள் அளவிற்குச் செல்லுபடியாகும் வகையிலான இந்திய நாட்டின் கடவுச் சீட்டினைப் பெறுவதற்கு 1,523 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிற நிலையில் இது உலகளவில் இரண்டாவது மலிவான கடவுச் சீட்டாக உள்ளது.

| Rank | Nation | Valid for (years) | Visa free countries | Cost of passport (AUD) |
|---|---|---|---|---|
| 1 | UAE | 5 | 183 | $27.13 |
| 2 | India | 10 | 62 | $27.70 |
| 3 | Hungary (5-year-passport) | 5 | 188 | $31.78 |
| 4 | South Africa | 10 | 108 | $48.44 |
| 5 | Kenya | 10 | 76 | $49.28 |
| 6 | Spain (for over 30-year-olds) | 10 | 194 | $49.49 |
| 6 | Spain (for under 30-year-olds) | 5 | 194 | $49.49 |
| 8 | Poland | 10 | 189 | $53.38 |
| 9 | Brazil | 10 | 173 | $55.59 |
| 10 | Sweden | 5 | 193 | $58.88 |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★